சுருக்கம்

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – 2023-2024 – அறிவிப்புகள் – மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் கீழ் செயல்படும் சிறப்புப்பள்ளிகள், அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் 1,000 பார்வை மாற்றுத்திறன் மாணவர்களுக்கு தகுதி மற்றும் தேவையின் அடிப்படையில் நவீன வாசிக்கும் கருவிகள் வழங்குவதற்கு ரூ.1,40,00,000/- நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–1.1)த் துறை

அரசாணை (நிலை) எண். 13

நாள்: 20.06.2023,
சோபகிருது, ஆனி – 5,
திருவள்ளுவர் ஆண்டு, 2054.

படிக்கப்பட்டது :

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 17.04.2023.
2. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரக ந.க. எண்.3228/உ.உ.பிரிவு/2023, நாள் 16.05.2023.

******

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 2023-2024-ஆம் ஆண்டிற்கான மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கையின் போது, 17.04.2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னபிறவற்றுடன் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்:-

> **"உயர்கல்வி பயிலும் 1,000 பார்வை மாற்றுத்திறன் மாணவர்களுக்கு தலா ரூ.14,000/- மதிப்பில் நவீன வாசிக்கும் கருவி வழங்கும் வகையில் ரூ.140.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும்".**

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, மாற்றுத்திறன் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக அரசால் பல்வேறு நவீன உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்றும் தற்போது, மேற்குறிப்பிட்டத் திட்டத்தை செயல்படுத்தும் விதமாக, அரசாணை (நிலை) எண்.18 மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-1)த் துறை, நாள் 12.03.2018-ன் படி, அரசு பார்வையற்றோர் சிறப்பு பள்ளிகளில் பயிலும் உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட வந்த நிலையில், தற்போது நவீன வாசிக்கும் கருவி, அனைத்து உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் பார்வை மாற்றுத்திறன் மாணவர்களுக்கு, தகுதி மற்றும் தேவையின் அடிப்படையில் நவீன வாசிக்கும் கருவியை வழங்கலாம் என்றும் கீழ்க்காணும் நவீன வாசிக்கும் கருவியில் உயர் வசதிகள் உள்ளது எனத் தெரிவித்துள்ளார் :-

1. இன்டர்நெட் ரேடியோ
2. USB பென் டிரைவ் மற்றும் SD கார்டு சேமிக்கும் வசதி

3. தமிழ் உட்பட மற்ற மொழிகளில் படிக்க உதவும் வசதி
4. நெட்வொர்க் இணைப்பு :WI-FI தவிர, மொபைல் ஃபோனின் ஹாட்ஸ்பாட் உடன் இணைக்கும் வசதி
5. டெய்சி புத்தகங்களை பதிவேற்றம் செய்தல், மின் புத்தகங்கள் வீடியோக்கள் ஹாட்ஸ்பாட்டைப் பயன்படுத்தி நேரடியாக பதிவிறக்கம் செய்தல்.
6. குரல் குறிப்புகள் மற்றும் உரை குறிப்புகளை பதிவு செய்யும் வசதி.
7. பார்வையற்றவர்களால் பயன்படுத்த எளிதான தொட்டுணரக்கூடிய பொத்தான்கள்.
8. Docx, Daisy, E-Pub, PDF, HTM ஆகியவற்றை எளிதாகப் படிக்கவும், பேசக்கூடிய மற்றும் தொட்டுணரக்கூடிய பொத்தான்கள்.

எனவே, முதற்கட்டமாக 1,000 நவீன வாசிக்கும் கருவிகள் தலா ரூ.14,000/- மதிப்பில் ரூ.140.00 இலட்சத்திற்கு கொள்முதல் செய்யலாம் என்றும் மேலும், இவ்வுபகரணம் தேவைப்படும் பயனாளிகள் கூடுதலாக இருக்கும் நேர்வில், உபகரணத்தின் விலை உத்தேச விலையை விட (ரூ.14,000/-) குறைவாக இருப்பின், மேற்குறிப்பிட்டத் தொகை ரூ.1.40 கோடிக்குள், எத்தனை உபகரணங்கள் வாங்க இயலுமோ அத்தனை உபகரணங்கள் கொள்முதல் செய்யவும், பயனாளிகள் குறைவாக இருக்கும் நேர்வில் தேவைப்படும் எண்ணிக்கையில் உபகரணங்கள் கொள்முதல் செய்யவும் ஆணை வழங்குமாறு அரசிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் கீழ் செயல்படும் சிறப்புப்பள்ளிகள், அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் 1,000 பார்வை மாற்றுத்திறன் மாணவர்களுக்கு தகுதி மற்றும் தேவையின் அடிப்படையில் தலா ரூ.14,000/- மதிப்பில் நவீன வாசிக்கும் கருவிகள் வழங்க ரூ.1,40,00,000/- (ரூபாய் ஒரு கோடியே நாற்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த புள்ளிகள் சட்டம், 1998 மற்றும் விதிகள் 2000-ஐ பின்பற்றி நவீன வாசிக்கும் கருவிகள் கொள்முதல் செய்யப்பட வேண்டும் என மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

4. மேலே பத்தி-3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> **"2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் – 101 – மாற்றுத்திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள் - AA – பார்வையற்றோர் பள்ளி – 324 – பொருள்களும் வழங்களும் – 01 பொருள்களும் வழங்களும்"**
> **(IFHRMS த.தொ.கு. 2235 – 02 – 101 – AA – 32401)**

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.1,40,00,000/-, 2023-2024-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினம் 2023-2024-ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சிறப்பு நிகழ்வாக கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகள் / திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு

உரிய கருத்துருவை தவறாது நிதி (சந / வ.செ.பொது.I)த் துறைக்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண்.24039/சந/2023, நாள் 20.06.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.323 (முந்நூற்று இருப்பத்து மூன்று) (IFHRMS ASL No.2023060323).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**இரா. ஆனந்தகுமார்,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.

**நகல்**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
செயலரின் தனிச் செயலாளர்,
மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சென்னை-9.
நிதித் (ச.ந/வ.செ.பொது-I,II/வ.வ.I)துறை, சென்னை-9.
திட்டம் வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

பிரிவு அலுவலர் 22/6/23
22/6/23